## பத்திரிக்கைச் செய்தி

செ.வெ.எண். 13/செப்டம்பர்/2011 நாள்: 5.9.2011

**உரங்கள் அதிக விலைக்கு விற்றால் நடவடிக்கை எடுக்கப்படும். புதுக்கோட்டை மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.ப.மகேஸ்வரி இ.ஆ.ப., அவர்கள் தகவல்**

---

உர விற்பனை மையங்களில் விவசாயிகள் உரம் வாங்கும்போது உரம் விற்பனைக்குரிய ரசீதுகளை கேட்டுப் பெற்றுக்கொள்ளுமாறு புதுக்கோட்டை மாவட்ட விவசாயிகள் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள். மேலும், வெவ்வேறு உர நிறுவனங்களின் உர விலைகள் வெவ்வேறாக இருப்பதால் உர மூட்டைகளில் அச்சடிக்கப்பட்டுள்ள அதிக பட்ச உர விற்பனை விலை (**MRP**) -க்கு மிகாமல் உரங்கள் விற்பனை செய்யப்பட வேண்டுமெனவும், அவ்வாறு இல்லாமல் உரங்கள் அதிக விலைக்கு விற்றால் சம்மந்தப்பட்ட உர விற்பனையாளர்கள் மீது உரக்கட்டுபாடு ஆணை 1985-ன்படி நடவடிக்கை எடுக்கப்படுமெனவும் தெரிவிக்கப்படுகின்றது.

உர விற்பனை நிலையங்களில் இருப்பிலுள்ள உரங்கள் மற்றும் விலை விவரம் அடங்கிய தகவல் பலகை தினந்தோறும் பராமரிக்கப்படவேண்டுமெனவும், விற்பனைக்கு அனுமதி பெற்றுள்ள உரங்களை மட்டுமே விற்பனை செய்ய வேண்டுமெனவும், உர இருப்புப் பதிவேடு மற்றும் ரசீது புத்தகம் முதலியன பராமரிக்கப்பட வேண்டுமெனவும் உர விற்பனையாளர்கள் எச்சரிக்கப்படுகின்றார்கள். தவறும் பட்சத்தில் உரக்கட்டுபாடு ஆணை , 1985-ன்படி நடவடிக்கை எடுக்கப்படுமென புதுக்கோட்டை மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.ப.மகேஸ்வரி இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

செய்தி வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், புதுக்கோட்டை.